# பாடம் - 9. வேலைக்கேற்ற கூலி

வகுப்பு: IV

பாடம்: தமிழ்

## அ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. அழகாபுரி மன்னர் தம் குடிமக்களை எவ்வாறு நடத்தினார்?**

அழகாபுரி மன்னர், அமைச்சர், விறகு வெட்டி என்ற வேறுபாடின்றி அனைவரையும் சமமாக நடத்தினார்.

**2. விறகுவெட்டி, மன்னரிடம் தம் மனக்குறையாக என்ன கூறினார்?**

'மன்னர், விறகு வெட்டியான தனக்கு நாள்தோறும் இரண்டு ரூபாய் கூலியும் அமைச்சருக்கு மாதத்திற்கு ஆயிரம் ரூபாயும் கொடுப்பதாகவும் அதுவே தம் மனக்குறை என்று விறகு வெட்டி மன்னரிடம் கூறினார்.

**3. மன்னர் அமைச்சரிடமும் விறகுவெட்டியிடமும் என்ன வேலை அளித்தார்?**

"அரண்மனைக்கு வெளியே ஏதாவது வண்டி செல்கிறதா?" என்று பார்த்து வரும்படி மன்னர் அமைச்சரிடமும் விறகு வெட்டியிடமும் கூறினார். அதற்கு அமைச்சர் ஒருமுறையே வெளியே சென்று வந்து பல பதில்களைக் கூறினார். ஆனால் விறகு வெட்டியோ ஒவ்வொரு முறையும் சென்று வந்து மன்னரிடம் பதில் அளித்தான்.

## ஆ. படத்தைப் பார்ப்போம் வினாக்கள் உருவாக்குவோம்.

1. யானை என்ன செய்கிறது?
2. வரிக்குதிரை ஏன் சோகமாக உள்ளது?
3. சீறி பாயும் விலங்கு எது?
4. புலி சண்டை போடுகிறதா?
5. நடனமாடும் விலங்கு எது?
6. படத்தில் எத்தனை பறவைகள் உள்ளன?



## மொழியோடு விளையாடு

## இ. சொல் உருவாக்கப் புதிர்.



01 | வரி

02 | திரை

03 | குதி

04 | வரை

05 | குரை

06 | குதிரை

07 | வரிக்குதிரை

## ஈ. சொல் எழுதுக சொற்றொடர் அமைக்க.

| | | |
|---|---|---|
| ம | ண / ன | ம் |

மணம் - பூக்கள் **மணம்** வீசும்

மனம் - மனிதருக்கு நல்ல **மனம்** வேண்டும்

| | |
|---|---|
| க | லை / ளை / ழை |

கலை - **கலை** காட்டில் வாழும்

களை - பயிர்களின் இடையில் வளரும் **களை**யை அகற்ற வேண்டும்

கழை - **கழை** கூரை போடுவதற்கு பயன்படுகிறது

| | |
|---|---|
| க | ரை / றை |

கரை - ஆற்றங்**கரை**யில் ஆலமரம் உள்ளது

கறை - வெண்மையான ஆடையில் **கறை** பளிச்சென தெரியும்

| | |
|---|---|
| இ | லை / ளை / ழை |

இலை - பசுமையான **இலை**களைப் பார்த்தால் ஆடு மேய்யும்

இளை - அரியாக உண்ணாமல் இருந்தால் கண்ணன் **இளை**த்து விடுவான்

இழை - புதியதாக வாங்கிய ஆடையில் நூல் **இழை** படிந்துவிட்டது.

## உ. விடுபட்ட எழுத்துகளை நிரப்பி விடுகதைக்கு விடையைக் கண்டுபிடிக்க.

| | | | | |
|---|---|---|---|---|
| | கா | க | ம் | |
| | ச | ங் | கு | |
| வெ | ங் | கா | ய | ம் |
| | க | ரு | ம் | பு |

1. கரைந்து அழைப்பேன் நான் யார்? <u>காகம்</u>
2. கடலில் கிடைப்பேன் நான் யார்? <u>சங்கு</u>
3. சமையலுக்கு உதவுவேன் நான் யார்? <u>வெங்காயம்</u>
4. இனிப்பாய் இருப்பேன் நான் யார்? <u>கரும்பு</u>
5. நீண்ட தூரம் தாவிடுவேன் தவளையும் இல்லை

குதித்துக் குதித்து ஓடிடுவேன் குதிரையும் இல்லை

பையைத் தான் கொண்டிருப்பேன் சட்டையும் இல்லை

கண்டுபிடித்த எழுத்துகளை ஒன்று சேர்த்தால் வருவேன் நான் யார்? <u>கங்காரு</u>